كَذٰلِكَ يَطْبَعُ اللّٰهُ عَلٰى قُلُوْبِ الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ ﴿٥٩﴾ فَاصْبِرْ
اِنَّ وَعْدَ اللّٰهِ حَقٌّ وَّلَا يَسْتَخِفَّنَّكَ الَّذِيْنَ لَا يُوْقِنُوْنَ ﴿٦٠﴾ ع ٦ ع ٧ ٩

## سُوْرَةُ لُقْمٰنَ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعٌ وَّثَلٰثُوْنَ اٰيَةً وَّاَرْبَعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

الٓمّٓ ﴿١﴾ تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ الْحَكِيْمِ ﴿٢﴾ هُدًى وَّرَحْمَةً لِّلْمُحْسِنِيْنَ ﴿٣﴾
الَّذِيْنَ يُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَيُؤْتُوْنَ الزَّكٰوةَ وَهُمْ بِالْاٰخِرَةِ هُمْ
يُوْقِنُوْنَ ﴿٤﴾ اُولٰٓئِكَ عَلٰى هُدًى مِّنْ رَّبِّهِمْ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿٥﴾
وَمِنَ النَّاسِ مَنْ يَّشْتَرِيْ لَهْوَ الْحَدِيْثِ لِيُضِلَّ عَنْ سَبِيْلِ
اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ ۖ وَّيَتَّخِذَهَا هُزُوًا ۗ اُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ مُّهِيْنٌ ﴿٦﴾
وَاِذَا تُتْلٰى عَلَيْهِ اٰيٰتُنَا وَلّٰى مُسْتَكْبِرًا كَاَنْ لَّمْ يَسْمَعْهَا كَاَنَّ
فِيْٓ اُذُنَيْهِ وَقْرًا ۚ فَبَشِّرْهُ بِعَذَابٍ اَلِيْمٍ ﴿٧﴾ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا
الصّٰلِحٰتِ لَهُمْ جَنّٰتُ النَّعِيْمِ ﴿٨﴾ خٰلِدِيْنَ فِيْهَا ۗ وَعْدَ اللّٰهِ حَقًّا ۗ
وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٩﴾ خَلَقَ السَّمٰوٰتِ بِغَيْرِ عَمَدٍ تَرَوْنَهَا وَاَلْقٰى
فِي الْاَرْضِ رَوَاسِيَ اَنْ تَمِيْدَ بِكُمْ وَبَثَّ فِيْهَا مِنْ كُلِّ دَآبَّةٍ ۗ
وَاَنْزَلْنَا مِنَ السَّمَآءِ مَآءً فَاَنْۢبَتْنَا فِيْهَا مِنْ كُلِّ زَوْجٍ كَرِيْمٍ ﴿١٠﴾

59. இவ்வாறே அறியாதோரின் இதயங்கள் மீது அல்லாஹ் முத்திரையிடுகிறான்.

60. ஆகவே (நபியே!) நீர் பொறுமையாய் இருப்பீராக! நிச்சயமாக அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானதாகும்; (ஆகவே முடிவில் நீர்தான் மிகைப்பீர், மறுமையை) உறுதிகொள்ளாதோர் நிச்சயமாக உம்மை, இலேசாகக் கருதிவிட வேண்டாம்.

---

அத்தியாயம் : 31

## லுக்மான்

வசனங்கள் : 34 மக்கீ ருகூஃகள் : 4

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. அலிஃப் லாம் மீம்.

2. இவை தீர்க்கமான அறிவு நிறைந்த (இவ்) வேதத்தின் வசனங்களாகும்.

3. (இது) நன்மை செய்வோருக்கு நேர் வழிகாட்டியாகவும், அருளாகவும் இருக்கின்றது.

4. அவர்கள் எத்தகையோரென்றால், தொழுகையை முறையாக நிறைவேற்றுவார்கள்; ஜகாத்தையும் கொடுப்பார்கள்; இன்னும், அவர்கள் — மறுமையைக் கொண்டு அவர்களே — உறுதி(யாக நம்பிக்கைக்)கொள்வார்கள்.

5. இத்தகையோர் தாம், தங்கள் இரட்சகனின் நேர் வழியில் இருப்பவர்கள்; மேலும், இத்தகையோர் தாம் வெற்றிபெறுகிறவர்கள்.

6. (இவர்களைத் தவிர) மனிதரில் — அறிவின்றி அல்லாஹ்வின் வழியிலிருந்து (மனிதர்களை) வழிகெடுப்பதற்காக வீணான செய்திகளை விலைக்கு வாங்குகின்றவர்களும் இருக்கின்றனர்; (அல்லாஹ்வின் வசனங்களாகிய) அதனைப் பரிகாசமாகவும் எடுத்துக்கொள்கின்றனர். இத்தகையோர் — அவர்களுக்கு இழிவு தரும் வேதனை உண்டு.

7. மேலும், அ(த்தகைய)வனின் மீது நம்முடைய வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்பட்டால், அவற்றை அவன் கேட்காதவனைப் போல், தன்னுடைய இரு காதுகளிலும் தடுப்பு உள்ளவனைப் போல் கர்வங் கொண்டவனாக(ப் புறக்கணித்து)த்திரும்பிவிடுகிறான். ஆகவே, அவனுக்கு துன்புறுத்தும் வேதனையைக்கொண்டு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!

8. நிச்சயமாக, விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கின்றார்களே அத்தகையோர் — அவர்களுக்கு அருட்கொடையுடைய சுவனபதிகளுண்டு.

9. அதில் அவர்கள் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்; அல்லாஹ்வுடைய (இவ்) வாக்குறுதி உண்மையானதே! அவனோ (யாவரையும்) மிகைத்தோன், தீர்க்கமான அறிவுடையோன்.

10. அவன் வானங்களைத் தூண்களின்றியே படைத்திருக்கிறான்; அதனை நீங்கள் பார்க்கின்றீர்கள்; பூமியில் — அது உங்களைக்கொண்டு அசைந்து விடாதிருக்கும் பொருட்டு, அசையாத மலைகளையும் அதில் ஆக்கிவைத்தான்; இன்னும், ஒவ்வொரு(விதமான) பிராணியையும் அதில் அவன் பரவச்செய்தான்; (மனிதர்களே! அல்லாஹ்வாகிய) நாமே வானத்திலிருந்து நீரை இறக்கிவைத்தோம்; பின்னர், (புற்பூண்டுகளில்) அழகான ஒவ்வொரு வகையிலிருந்து அதில் நாம் முளைக்கச் செய்தோம்.

هٰذَا خَلْقُ اللّٰهِ فَاَرُوْنِيْ مَاذَا خَلَقَ الَّذِيْنَ مِنْ دُوْنِهٖ ؕ بَلِ
الظّٰلِمُوْنَ فِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۱۱﴾ وَلَقَدْ اٰتَيْنَا لُقْمٰنَ الْحِكْمَةَ اَنِ اشْكُرْ ع ۱۰
لِلّٰهِ ؕ وَمَنْ يَّشْكُرْ فَاِنَّمَا يَشْكُرُ لِنَفْسِهٖ ۚ وَمَنْ كَفَرَ فَاِنَّ اللّٰهَ غَنِيٌّ
حَمِيْدٌ ﴿۱۲﴾ وَاِذْ قَالَ لُقْمٰنُ لِابْنِهٖ وَهُوَ يَعِظُهٗ يٰبُنَيَّ لَا تُشْرِكْ بِاللّٰهِ ؕ وقف النبی صلی اللہ علیہ وسلم
اِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِيْمٌ ﴿۱۳﴾ وَوَصَّيْنَا الْاِنْسَانَ بِوَالِدَيْهِ ۚ حَمَلَتْهُ
اُمُّهٗ وَهْنًا عَلٰى وَهْنٍ وَّفِصٰلُهٗ فِيْ عَامَيْنِ اَنِ اشْكُرْ لِيْ وَلِوَالِدَيْكَ ؕ
اِلَيَّ الْمَصِيْرُ ﴿۱۴﴾ وَاِنْ جٰهَدٰكَ عَلٰۤى اَنْ تُشْرِكَ بِيْ مَا لَيْسَ لَكَ النصف
بِهٖ عِلْمٌ فَلَا تُطِعْهُمَا وَصَاحِبْهُمَا فِي الدُّنْيَا مَعْرُوْفًا ۫ وَّاتَّبِعْ
سَبِيْلَ مَنْ اَنَابَ اِلَيَّ ۚ ثُمَّ اِلَيَّ مَرْجِعُكُمْ فَاُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ
تَعْمَلُوْنَ ﴿۱۵﴾ يٰبُنَيَّ اِنَّهَاۤ اِنْ تَكُ مِثْقَالَ حَبَّةٍ مِّنْ خَرْدَلٍ
فَتَكُنْ فِيْ صَخْرَةٍ اَوْ فِي السَّمٰوٰتِ اَوْ فِي الْاَرْضِ يَاْتِ بِهَا
اللّٰهُ ؕ اِنَّ اللّٰهَ لَطِيْفٌ خَبِيْرٌ ﴿۱۶﴾ يٰبُنَيَّ اَقِمِ الصَّلٰوةَ وَاْمُرْ
بِالْمَعْرُوْفِ وَانْهَ عَنِ الْمُنْكَرِ وَاصْبِرْ عَلٰى مَاۤ اَصَابَكَ ؕ
اِنَّ ذٰلِكَ مِنْ عَزْمِ الْاُمُوْرِ ﴿۱۷﴾ ۚ وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا
تَمْشِ فِي الْاَرْضِ مَرَحًا ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُوْرٍ ﴿۱۸﴾ ۚ

11.(ஆகவே நபியே! நீர் அவர்களிடம் கூறுவீராக:) "இவை (யாவும்) அல்லாஹ்வின் படைப்பாகும்; ஆகவே அவனையன்றி (நீங்கள் வணக்கத்திற்குரியவர்களெனக் கூறுகின்ற) அவர்கள் எதனைப் படைத்திருக்கின்றனர் என்பதை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள்;(அவ்வாறு ஒன்றும்)இல்லை!(அல்லாஹ்வையன்றி மற்றவைகளை வணங்கும் இந்த ) அநியாயக்காரர்கள் பகிரங்கமான வழிகேட்டில் இருக்கின்றனர்.

12. நிச்சயமாக, நாம் லுக்மானுக்கு (ச்சிறந்த) அறிவையும் கொடுத்தோம்; நீர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவீராக! (என்று கூறினோம்) இன்னும், எவர் நன்றி செலுத்துகின்றாரோ அவர் நன்றி செலுத்துவதெல்லாம் தம(துநன்மை)க்குத்தான்; மேலும், எவர் (அவனை) நிராகரிக்கின்றாரோ _ (அவர் தனக்கே தீங்கைத் தேடிக்கொள்கிறார். ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ் தேவையற்றவன் ; புகழப்படுபவன் (என்று கூறினோம்).

13. மேலும், லுக்மான் தன் மைந்தனுக்கு_அவர் அவருக்கு உபதேசம் செய்தவராக_ என் அருமை மைந்தனே! நீ அல்லாஹ்வுக்கு இணைவைக்காதே! நிச்சயமாக, இணைவைத்தல் மிகப்பெரிய அநியாயமாகும் என்று கூறியதை _ (நபியே! நீர் நினைவு கூர்வீராக!)

14. நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் அன்பு கொண்டு அரவணைத்துக் கொள்வது) பற்றி நல்லுபதேசமும் செய்தோம்; அவனுடைய தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனம் அடைந்தவளாக அவனைச் சுமந்தாள்; இன்னும் (அவனுக்குப் பால்குடி மறக்கடித்து)அவன் பிரிவது இரண்டு வருடங்களிலாகும்; (ஆகவே மனிதனே!) "நீ எனக்கும், உன்னுடைய பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக; (முடிவில் ) என்னிடமே (உன்)மீளுதல் இருக்கிறது."

15. எது பற்றி உனக்கு அறிவு(ஆதாரம்) இல்லையோ, அதை எனக்கு நீ இணையாக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால் (அவ்விஷயத்தில் )நீ அவ்விருவருக்கும் கீழ்ப்படியவேண்டாம்; ஆயினும், இவ்வுலகத்தில் நன்மையான காரியத்தில் நீ அவ்விருவருடனும் (அன்புடன் ஒத்து) உடனிருப்பாயாக; இன்னும், (வழிபாட்டில்) என்பால் திரும்பியவரின் வழியை நீ பின்பற்றுவாயாக; பின்னர், நீங்கள் (யாவரும்) என்னிடமே திரும்பி வந்து சேரவேண்டியதிருக்கின்றது; அப்பொழுது நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிப்பேன்.

16. "என்னருமை மைந்தனே! நிச்சயமாக அது (நன்மையோ, தீமையோ) கடுகின் வித்தளவாக இருப்பினும் (சரி) அது ஒரு பாறைக்குள் அல்லது வானங்களில் அல்லது பூமியில் (மறைந்து) இருந்த போதிலும் (கேள்வி கணக்கின் போது) அல்லாஹ் அதனைக் கொண்டுவந்துவிடுவான்; ( ஏனென்றால் ,) நிச்சயமாக அல்லாஹ் வெகு நுட்பமான (அறிவுடைய)வன்; நன்கு உணர்பவன்."

17. "என்னருமை மைந்தனே! நீ தொழுகையை நிறைவேற்றுவாயாக! நன்மையைக்கொண்டும் (பிறரை)ஏவுவாயாக! பாவமான காரியங்களிலிருந்தும் (மனிதர்களை) விலக்குவாயாக! மேலும், உனக்கேற்படும் கஷ்டங்களை, நீ பொறுமையுடன் சகித்துக்கொள்வாயாக! நிச்சயமாக (அல்லாஹ் கட்டளையிட்ட) இது காரியங்களில், உறுதியானதில் உள்ளதாகும்."

18. அன்றியும், "(பெருமை கொண்டு) உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக்கொள்ளாதே! மேலும், பூமியில் கர்வமாக நடக்காதே! நிச்சயமாக அல்லாஹ், தற்பெருமைக்காரர், கர்வங்கொண்டோர் ஒவ்வொருவரையும் நேசிக்கமாட்டான்."

وَاقْصِدْ فِيْ مَشْيِكَ وَاغْضُضْ مِنْ صَوْتِكَ ؕ اِنَّ اَنْكَرَ الْاَصْوَاتِ
ع ۲ لَصَوْتُ الْحَمِيْرِ ﴿۱۹﴾ ع اَلَمْ تَرَوْا اَنَّ اللّٰهَ سَخَّرَ لَكُمْ مَّا فِي السَّمٰوٰتِ وَمَا
فِي الْاَرْضِ وَاَسْبَغَ عَلَيْكُمْ نِعَمَهٗ ظَاهِرَةً وَّبَاطِنَةً ؕ وَمِنَ النَّاسِ
مَنْ يُّجَادِلُ فِي اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ وَّلَا هُدًى وَّلَا كِتٰبٍ مُّنِيْرٍ ﴿۲۰﴾ وَ
اِذَا قِيْلَ لَهُمُ اتَّبِعُوْا مَاۤ اَنْزَلَ اللّٰهُ قَالُوْا بَلْ نَتَّبِعُ مَا وَجَدْنَا
عَلَيْهِ اٰبَآءَنَا ؕ اَوَلَوْ كَانَ الشَّيْطٰنُ يَدْعُوْهُمْ اِلٰى عَذَابِ السَّعِيْرِ ﴿۲۱﴾
وَمَنْ يُّسْلِمْ وَجْهَهٗۤ اِلَى اللّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَقَدِ اسْتَمْسَكَ
بِالْعُرْوَةِ الْوُثْقٰى ؕ وَاِلَى اللّٰهِ عَاقِبَةُ الْاُمُوْرِ ﴿۲۲﴾ وَمَنْ كَفَرَ فَلَا
يَحْزُنْكَ كُفْرُهٗ ؕ اِلَيْنَا مَرْجِعُهُمْ فَنُنَبِّئُهُمْ بِمَا عَمِلُوْا ؕ اِنَّ اللّٰهَ
عَلِيْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿۲۳﴾ نُمَتِّعُهُمْ قَلِيْلًا ثُمَّ نَضْطَرُّهُمْ اِلٰى
عَذَابٍ غَلِيْظٍ ﴿۲۴﴾ وَلَئِنْ سَاَلْتَهُمْ مَّنْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ
لَيَقُوْلُنَّ اللّٰهُ ؕ قُلِ الْحَمْدُ لِلّٰهِ ؕ بَلْ اَكْثَرُهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿۲۵﴾ لِلّٰهِ مَا
فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ اِنَّ اللّٰهَ هُوَ الْغَنِيُّ الْحَمِيْدُ ﴿۲۶﴾ وَلَوْ اَنَّمَا
فِي الْاَرْضِ مِنْ شَجَرَةٍ اَقْلَامٌ وَّالْبَحْرُ يَمُدُّهٗ مِنْ بَعْدِهٖ
سَبْعَةُ اَبْحُرٍ مَّا نَفِدَتْ كَلِمٰتُ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۲۷﴾

19. மேலும், "உன் நடையில் மத்தியதரத்தை கடைப்பிடிப்பாயாக! உன் சப்தத்தையும் தாழ்த்திக்கொள்வாயாக! (ஏனென்றால்) நிச்சயமாக சப்தங்களிலெல்லாம் மிக வெறுக்கத்தக்கது, கழுதைகளின் சப்தமே" (என்று கூறினார்).

20. (மனிதர்களே!) வானங்களில் உள்ளவற்றையும், பூமியில் உள்ளவற்றையும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கின்றான் என்பதையும், அவன் தன் அருட் கொடைகளை (அவற்றில்) வெளிப்படையானவற்றையும், மறைவானவற்றையும் உங்கள் மீது நிறைவாக்கியிருக்கின்றான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா?(ஆனாலும்) மனிதர்களில் சிலர் கல்வியறிவோ, நேர் வழியோ, ஒளிமிக்க வேத(ஆதார)மோ இன்றி, அல்லாஹ்வைப் பற்றி (வீணாக)த் தர்க்கிக்கின்றனர்.

21. அன்றியும்,"அல்லாஹ் இறக்கிய (இவ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்" என அவர்களுக்கு கூறப்பட்டால், (அதற்கு) அவர்கள், "அவ்வாறல்ல! எங்கள் மூதாதையரை எதன் மீதிருக்க நாங்கள் கண்டோமோ, அதனையே நாங்கள் பின்பற்றுவோம்" என்று கூறுகின்றனர்; அவர் (களின் மூதாதையர்)களை ஷைத்தான் கொழுந்துவிட்டெரியும் வேதனையின்பால் அழைத்தாலுமா (அவர்களைப் பின்பற்றுவார்கள்)?

22. எவர் _ அவர் நன்மை செய்கிறவராயிருக்கும் நிலையில் (தனது காரியத்தை முழுமையாக ஒப்படைத்து) அல்லாஹ்வின் பால் தன் முகத்தை திருப்புகிறாரோ அவர், நிச்சயமாக மிக மிக பலமானதொரு கயிற்றைப் பற்றிப் பிடித்துக்கொண்டார்; சகல காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கின்றது.

23. மேலும், (நபியே!) எவர் நிராகரித்துவிட்டாரோ, அவருடைய நிராகரிப்பு உமக்குக் கவலையை உண்டாக்க வேண்டாம்; அவர்களின் மீளுதல் நம் பக்கமேயாகும்; அது சமயம் அவர்கள் செய்தவற்றைப் பற்றி நாம் அவர்களுக்கு அறிவிப்போம்; நிச்சயமாக அல்லாஹ், (மனிதர்களின்) நெஞ்சங்களில் உள்ளவைகளை நன்கறிகிறவன்.

24. (இம்மையில்) அவர்களைச் சிறிது சுகமனுபவிக்கச் செய்வோம்; பின்னர், கடுமையான வேதனையின்பால் (செல்லும்படி)நாம் அவர்களை நிர்ப்பந்திப் போம்.

25. மேலும் வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தவன் யார்? என்று (நபியே!) நீர் அவர்களைக் கேட்பீராயின் அ(தற்க)வர்கள், "அல்லாஹ்" என்று நிச்சயமாக கூறுவார்க்ள்; (அது பற்றி) புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே என்று கூறுவீராக! எனினும் அவர்களில் பெரும்பாலோர் (இரட்சகனை இவ்வாறு புகழ்ந்து துதி செய்ய) அறியமாட்டார்கள்.

26. வானங்களிலும்,பூமியிலும் உள்ளவை அல்லாஹ்வுக்கே உரியவை;(எனினும்) நிச்சயமாக அல்லாஹ் _ (சகலவற்றிலிருந்தும்) அவன் தேவையற்றவன்; புகழப்படுபவன்.

27. மேலும், நிச்சயமாக பூமியில் உள்ள மரங்கள்(யாவும்) எழுதுகோல்களாகவும், கடல் (நீர் யாவும் மையாக இருந்து) அ(து தீர்ந்த)தற்கு பின்னர் ஏழுகடல்கள் அதனுடன் (மையாக)சேர்ந்து(கொள்ள அவற்றால் எழுதிக்) கொண்டிருந்தாலும் அல்லாஹ்வின் வாக்குகள் (எழுதித்) தீராது; நிச்சயமாக அல்லாஹ் (யாவையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

مَا خَلْقُكُمْ وَلَا بَعْثُكُمْ اِلَّا كَنَفْسٍ وَّاحِدَةٍ ؕ اِنَّ اللّٰهَ سَمِيْعٌۢ بَصِيْرٌ ﴿۲۸﴾
اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ يُوْلِجُ الَّيْلَ فِى النَّهَارِ وَيُوْلِجُ النَّهَارَ فِى الَّيْلِ
وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ ۖ كُلٌّ يَّجْرِىْۤ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى وَّاَنَّ اللّٰهَ
بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ﴿۲۹﴾ ذٰلِكَ بِاَنَّ اللّٰهَ هُوَ الْحَقُّ وَاَنَّ مَا يَدْعُوْنَ
مِنْ دُوْنِهِ الْبَاطِلُ ۙ وَاَنَّ اللّٰهَ هُوَ الْعَلِىُّ الْكَبِيْرُ ﴿۳۰﴾ ع اَلَمْ تَرَ اَنَّ ۳ ع ۱۲
الْفُلْكَ تَجْرِىْ فِى الْبَحْرِ بِنِعْمَتِ اللّٰهِ لِيُرِيَكُمْ مِّنْ اٰيٰتِهٖ ؕ اِنَّ فِىْ
ذٰلِكَ لَاٰيٰتٍ لِّكُلِّ صَبَّارٍ شَكُوْرٍ ﴿۳۱﴾ وَاِذَا غَشِيَهُمْ مَّوْجٌ كَالظُّلَلِ
دَعَوُا اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ۚ فَلَمَّا نَجّٰىهُمْ اِلَى الْبَرِّ
فَمِنْهُمْ مُّقْتَصِدٌ ؕ وَمَا يَجْحَدُ بِاٰيٰتِنَاۤ اِلَّا كُلُّ خَتَّارٍ كَفُوْرٍ ﴿۳۲﴾
يٰۤاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمْ وَاخْشَوْا يَوْمًا لَّا يَجْزِىْ وَالِدٌ
عَنْ وَّلَدِهٖ ۫ وَلَا مَوْلُوْدٌ هُوَ جَازٍ عَنْ وَّالِدِهٖ شَيْــًٔا ؕ اِنَّ وَعْدَ
اللّٰهِ حَقٌّ فَلَا تَغُرَّنَّكُمُ الْحَيٰوةُ الدُّنْيَا وقفة وَلَا يَغُرَّنَّكُمْ بِاللّٰهِ
الْغَرُوْرُ ﴿۳۳﴾ اِنَّ اللّٰهَ عِنْدَهٗ عِلْمُ السَّاعَةِ ۚ وَيُنَزِّلُ الْغَيْثَ ۚ وَ
يَعْلَمُ مَا فِى الْاَرْحَامِ ؕ وَمَا تَدْرِىْ نَفْسٌ مَّاذَا تَكْسِبُ غَدًا ؕ
وَمَا تَدْرِىْ نَفْسٌۢ بِاَىِّ اَرْضٍ تَمُوْتُ ؕ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ ﴿۳۴﴾ ع ۴ ع ۱۳

28. (மனிதர்களே!) உங்களை(ப் புதிதாக)ப் படைப்பதும்,(மரணித்தபின்) உங்களை (மீண்டும் உயிர் கொடுத்து) எழுப்புவதும் ஓர் ஆத்மாவைப் படை(த்து உயிர் கொடு)ப்பது போலவே தவிர (வேறு) இல்லை. நிச்சயமாக அல்லாஹ், (யாவையும்) செவியேற்கிறவன், பார்க்கிறவன்.

29. (நபியே!) நிச்சயமாக அல்லாஹ் இரவைப் பகலில் புகவைக்கிறான்; பகலை இரவில் புகவைக்கிறான் என்பதையும், சூரியனையும் சந்திரனையும் வசப்படுத்தியிருக்கிறான் என்பதையும் நீர் பார்க்கவில்லையா? (இவற்றில்) ஒவ்வொன்றும் குறிப்பிடப்பட்ட தவணையின்பால் நடக்கின்றன; இன்னும், நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை, நன்கு உணர்பவன்.

30. அது( ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ் _ அவனே மெய்யானவனாவான்; அவனைத் தவிர அவர்கள் அழைப்பது பொய்யானதாகும்; மேலும், நிச்சயமாக அல்லாஹ் _ அவனே (சகலரையும்விட) உயர்வுடையவன்; மிகப்பெரியவன் என்ற காரணத்திலாகும்.

31. தன்னுடைய அத்தாட்சிகளை உங்களுக்கு அவன் காண்பிப்பதற்காகவேண்டி அல்லாஹ்வின் அருட்கொடையைக் கொண்டு, கடலில் நிச்சயமாக கப்பல் (மிதந்து) செல்வதை நீர் காணவில்லையா? நிச்சயமாக இதில், அதிகமாகப் பொறுமையுடையோர் _ நன்றியுடையோருக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

32. (கடலில் பிரயாணிக்கும்) அவர்களை(ப் புயல் காற்றடித்து நாலா பக்கங்களிலிருந்தும்) அலைகள், மேல் முகடுகளைப் போல் சூழ்ந்து கொள்ளும் சமயத்தில் அல்லாஹ்வை _ அவனுக்கே மார்க்கத்தை கலப்பற்றதாக ஆக்கியவர்களாக _ அவர்கள் அழை(த்துப் பிரார்த்தி)க்கின்றனர்; அவன், அவர்களைக் காப்பாற்றி கரை சேர்த்துவிட்டால், அப்போது அவர்களில் (அல்லாஹ்வை விசுவாசங் கொள்ளும்)நீதமானவரும் உண்டு; இன்னும் மிக நன்றிகெட்ட பெரும் சதிகாரர்களைத் தவிர, (மற்றெவரும்) நம்முடைய அத்தாட்சிகளை நிராகரிப்பதில்லை.

33. மனிதர்களே! உங்கள் இரட்சகனுக்கு பயந்து கொள்ளுங்கள்; இன்னும், ஒரு நாளை பயப்படுங்கள்; (அந்நாளில்,) எந்தத் தந்தையும் தன் பிள்ளைக்கு உதவமாட்டான்; எந்தப் பிள்ளையும் தன் தந்தைக்கு எத்தகைய உதவியும் செய்பவனாக இல்லை. நிச்சயமாக (அந்நாள் வருமென்ற) அல்லாஹ்வுடைய வாக்குறுதி, உண்மையானதாகும்; ஆகவே, நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை உங்களை ஏமாற்றிவிட வேண்டாம்; (ஷைத்தானாகிய) ஏமாற்றுபவனும், அல்லாஹ்வைப்பற்றி உங்களை ஏமாற்றிவிட வேண்டாம்.

34. நிச்சயமாக அல்லாஹ் _ அவனிடம்தான் மறுமைநாள் பற்றிய அறிவு, இருக்கிறது; அவனே மழையையும் இறக்கிவைக்கிறான்; அவனே கர்ப்பங்களில் உள்ளவைகளையும் அறிகிறான்; எந்த ஆத்மாவும், நாளை அது எதைச் சம்பாதிக்கும் என அறியாது; மேலும், எந்த ஆத்மாவும் எந்தப் பூமியில் தனக்கு மரணம் சம்பவிக்கும் என்பதையும் அறியாது; நிச்சயமாக அல்லாஹ் (அவனே) நன்கறிகிறவன்; (செய்திகளை) நன்குணர்பவன்.